# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 10/ 2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 5 |
| Name | : பார்த்திபன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2025.

--------

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் குருவிலான்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எதிரியை தெரியும். சுமார் 3 வருடத்திற்கு முன் காலை 10 மணிக்கு சமத்துவபுரம் டுவீலர் ஒர்க்ஷாப் முன்பு சாமிராஜை எதிரி சிலைராஜா அரிவாளை கொண்டு கழுத்தை நோக்கி வெட்டும் போது இடது கை மணிக்ட்டில் பட்டது. காயம்பட்ட சாமிராஜை நானும், தங்கமலை, பிரபு, பரத் ஆகியோர் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு போக்கு ஆட்டோவில் அழைத்து சென்றோம், அங்கு முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு காயம் அதிகமாக இருந்ததால் அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். சாமிராஜா மனைவி

பாண்டியம்மாளுக்கும், எதிரிக்கும் தவறுதலாக உறவு இருந்ததால் சாமிராஜா அதனை கேட்டதால் மேற்படி சம்பவம் நடந்தது.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை-**

சம்பவம் நடந்த போது கடையில் இருந்தேன். எனது கடை குருவிலான்பட்டி விலக்கில் உள்ளது. கடையில் இருக்கும் போது காலை 10 மணியிருக்கும். சம்பவ இடத்திற்கும் கடைக்கும் 600 மீட்டர் தொலைவு இருக்கும்- சாமிராஜா அலறல் சத்தத்தைகேட்டு போனேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு போகும்போது சாமிராஜாவிற்கு காயங்கள் பட்டு இருந்தது என்றால் சரிதான். நான் மட்டும் தான் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் நான், பரத், தங்கமலை எனது கடையில் இருந்து சென்றோம். நான் பார்க்கும் போது கூட்டமாக ஆட்கள் இருந்தாகள் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் எதிரியை பார்த்தேனா என்றால் எதிரி அங்கிருந்து பைக்கில் ஏறி போய்விட்டார். எதிரி சென்ற பைக் என்ன மாடல், என்ன கலர் என்று தெரியாது. சிலைராஜா பைக்கில் செல்லும் போது அரிவாளை கையில் வைத்திருந்தார், அரிவாள் என்ன பிடி என்று பார்க்கவில்லை. சிலைராஜா எந்த திசையில் போனார் என்றால் தெற்கு பார்த்து சென்றார். புகார்தாரர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். புகார் தாரர் மனவளர்ச்சி குன்றியவர் என்றால்ர சரிதான்,. சம்பவத்தன்று டுவீலர் ஒர்க்ஷாப் அருகிலிருந்து கடைகன் அடைத்து இருந்தது. சா மிராஜா என்ன கலர் உடை உடுத்தியிருந்தார் என்றால் ஞாபகமில்லை. சம்பவம் இடத்திற்கு போலீசார் உடனே வரவில்லை. சம்பவம் எந்த தேதியில் நடைபெற்றது என்றால் 21.04.2021 தேதி. சம்பவம் நடைபெற்ற நேரம் காலை 10 மணி என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. கடையில் இருந்து நடந்து தான் சம்பவ இடம் சென்றேன். சம்பவம் இடம் போகும் போது சாமிராஜா மயக்க நிலையில் தான் இருந்தார். சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சம்பவம் நடக்கும் போது கேள்விப்பட்டு சென்றேன் என்றால் சரியல்ல.

**நான் தற்போது கூறியது போலத்தான் போலீசார் விசாரணையில் சொல்லியுளளேன்.**

**சம்பவத்தன்று தான் விசாரித்தார்கள்.**

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.07.17 14:09:20 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.